




தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் தாமரங்கோட்டை ஊராட்சியில் மூன்றாவது கட்டமாக மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் மற்றும் பலர் உள்ளனர்.

### துணை முதலமைச்சர், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் இல்லத் திருமண வரவேற்பு விழா!

### கே.என்.நேரு - எஸ்.ரகுபதி - கே.ஆர்.பெரியகருப்பன் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி - சிவ.வீ.மெய்யநாதன் - கோவி.செழியன் - அன்பகம் கலை - கே.கே.செல்லப்பாண்டியன் முன்னிலை! சு.சண்முகம் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, பிப். 9 - முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நல்வாழ்த்துக்களுடன், நினைவில் வாழும் முன்னாள் மாநகரச் செயலாளர் ஆ.செந்தில் நல்லாசியுடனும், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் இல்லத் திருமண வரவேற்பு விழா, (மாலையீடு) ஏடிஆர் மஹாலில் இன்று (09.02.2025) மாலை 5.30 மணி முதல் இரவு 9 மணி வரை, துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மணமக்கள் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் செ.கணேஷ், சுப.கஸ்தூரி ரெத்னா ஆகியோர் திருமண வரவேற்பு விழா நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா தந்தை கா.வைரக்கண்ணு திருவுருவப் படம், முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஸ்டாலின் நாராயணசாமி ஆகியோரது படத்திற்கு மலரஞ்சலி செலுத்தவுள்ளார்.

எனவே மாவட்ட துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை மற்றும் வார்டு இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக இளைஞர் அணி உறுப்பினர்கள் என அனைவரும் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இளைஞர் அணி சார்பில் வரவேற்க தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

